**DECODING EDUCATION** :- IN OUR DESPERATION TO TOP THE RANKING LIST OF COLLEGES, ARE WE SACRIFICING THE SYSTEMATIC AND HOLISTIC DEVELOPMENT OF OUR STUDENTS? WE SAVE OUR STUDENTS OR SAVE OUR OWN INSTITUTIONS? CAN WE HAVE THE CAKE AND EAT IT TOO? IS HAPPINESS OF EDUCATION BY THE SIDE OF THE ROAD OR AT THE END OF THE ROAD?

IT IS HIGH-TIME WE GOT SOME EXTRA-EXPOSURE ABOUT THE MENTORING OF STUDENTS AS FURNISHED HEREUNDER…..

1. **உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் மாணவ மாணவிகள் பற்றிய தர வரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது.**

2. மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் மாணவ மாணவிகள், ஆர்வத்துடன் கல்வியை சுவைப்பதில் புதிர் எதுவும் இல்லை.

3. உலக அளவில் ‘கல்வியின் மெக்கா’ என அழைக்கப்படுவது பின்லாந்து. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தில் எவ்வளவு மேம்பட்ட நிலையில் இருந்தாலும், அவர்களால் கல்வியில் பின்லாந்துடன் போட்டி போட முடியவில்லை.

4. பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்கூடத்திற்குச் செல்லத் தொடங்குகிறது.

5. ஒன்றரை வயதில் ப்ளே ஸ்கூல், இரண்டரை வயதில் ப்ரீ.கே.ஜி.

6. மூன்று வயதில் எல்.கே.ஜி. என்ற கான்செப்ட் அங்கே இல்லை. கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று பள்ளியில் உட்கார்ந்து கொள்ளும் அவசரமும் இல்லை.

7. எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை

ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான், அவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணம் அங்கு இல்லை.

8. ஒவ்வொரு நாளும் கல்விக்கூடம் இயங்கும் நேரமும் குறைவுதான். அந்த நேரத்திலும்கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டுக்கும் உண்டு.

9. முக்கியமாக 13 வயதுவரை ரேங்கிங் என்ற தரம்பிரிக்கும் கலாசாரம் கிடையாது.

10. தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என பெற்றோர்கள் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணபித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

11. கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை.

12. சக மாணவர்களை போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் இல்லை.

13. மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப் பாடம் செய்து வரலாம்.

14. தேர்வுகளை அடிப்படையாகக் கொள்ளாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர். இது எப்படி என்பது கல்வியாளர்களுக்கே புரியாத புதிர். அந்த புதிருக்கான விடையை, ஐ.நா சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்தது.

15. பின்லாந்து கல்விமுறையின் இத்தகை சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர். உலகின் 56 நாடுகளிலிருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர்.

16. நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான சதவிகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது.

17. ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ்மாலைகளை பின்லாந்தின் கல்வியாளர்கள் ஓடோடி வந்து ஏந்திக் கொள்வது இல்லை.

18. கல்வியில் இருந்து நாம் பெறவேண்டிய சாராம்சம் இதுதான். இத்தகைய கல்விமுறையை உருவாக்கியதிலும், பராமரிப்பதிலும் பின்லாந்தின் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. சொல்லப்போனால் பின்லாந்து ஆசிரியர்கள்தான் இதற்கு முழுக்க முழுக்க காரணம்.

19. பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது நம்ம ஊர் ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ் போல மிகுந்த சமூக கௌரவம் உடையது.

20. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. மூன்றில் ஒரு பின்லாந்து மாணவனுக்கு ஆசிரியர் ஆவதுதான் வாழ்நாள் லட்சியம். அதே நேரம் அங்கு ஆசிரியர் ஆவது அத்தனை சுலபமல்ல.

21. மேல்நிலை வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஐந்து ஆண்டுகள் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் சேர்ந்து கடும் பயிற்சி எடுக்க வேண்டும். பிறகு, ஆறு மாத காலம் ராணுவப்பயிற்சி.

22. ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பள்ளிகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி. ஏதாவது ஒரு பாடத்தில் புராஜெக்ட், குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பது, நாட்டின் சட்டத் திட்டங்கள் குறித்த தெளிவுக்காக தேசிய அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ், தீயணைப்பு, தற்காப்புப் பயிற்சி, முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்று … என ஆசிரியர் பயிற்சிக்கு சுமார் ஏழு வருடங்களைச் செலவிட வேண்டும்.

23. இப்படி ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள்தான், அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது.

-------------------